**மேல்நிலை முதலாம் ஆண்டு செய்முறைத் தேர்வு நடத்துதல்– ஆணை**

சுருக்கம்

பள்ளிக் கல்வி– மேல்நிலைக் கல்வி– மேல்நிலை முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு மாநில அளவில் பொதுத் தேர்வு நடத்த ஆணை– வெளியிடப்பட்டது– மேல்நிலை முதலாம் ஆண்டு செய்முறைத் தேர்வு நடத்துதல்– ஆணை –வெளியிடப்படுகிறது.

**பள்ளிக்கல்வி (ஜி.இ–1)துறை**

**அரசாணை (1டி) எண். 227** **நாள்:06.11.2017**

திருவள்ளுவர் ஆண்டு 2048,
ஹேவிளம்பி வருடம், ஐப்பசி 20

**படிக்கப்பட்டவை:–**

1. அரசாணை (நிலை) எண்.100, பள்ளிக் கல்வி (அ.தே.1)த் துறை, நாள் 22.05.2017
2. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் கடிதம், ந.க.எண்.2592/D2/2017 நாள்:20.09.2017.

**ஆணை:–**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2017–2018–ஆம் கல்வியாண்டிலிருந்து மேல்நிலை முதலாம் ஆண்டு மாணவர்களுக்குப் மாநில அளவில் அரசுப் பொதுத் தேர்வுகள் நடத்தப்படும் என ஆணை வெளியிடப்பட்டது. அவ்வரசாணையின் பத்தி 2018ல் முதலாம் ஆண்டு செய்முறைத் தேர்வினை இரண்டாம் ஆண்டு நடைபெறும் செய்முறைத் தேர்வுடன் இணைத்து நடத்தலாம் என உத்திரவிடப்பட்டது.

2. இதனை நடைமுறைப்படுத்துவதில் உள்ள இடர்பாடுகள் குறித்து அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கருத்தினை தொடர்ந்து பார்வையிரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், மேல்நிலை முதலாம் ஆண்டு செய்முறைத் தேர்வினை அவ்வாண்டிலேயே நடத்துமாறு பார்வையொன்றில் படிக்கப்பட்ட அரசாணைக்கு உரிய திருத்தம் வெளியிடுமாறு மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் பரிந்துரையினை ஏற்று, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் பத்தி 12(எ) மற்றும் அதன் பிற்சேர்க்கை–1 ஆகியவற்றிற்கு கீழ்க்கண்டவாறு திருத்தம் வெளிடப்படுகிறது.

**திருத்தம்**

(அ) மேற்காணும் அரசாணையில், பத்தி 12 (எ) வில் முதலாம் ஆண்டு, செய்முறைத் தேர்வினை இரண்டாம் ஆண்டு நடைபெறும் செய்முறைத் தேர்வுடன் இணைத்து நடத்தப்படும். ஏன்பதற்கு பதிலாக "முதலாம் ஆண்டு செய்முறைத் தேர்வினை அவ்வாண்டு பொதுத் தேர்வுடன் இணைத்து நடத்தப்படும்'' என திருத்தி வாசிக்கலாம்.

(ஆ) மேலும், மேற்படி அரசாணையின் இணைப்பு 1–ல் மேல்நிலை முதலாமாண்டு செய்முறை தேர்வுகள் குறித்து 20 மதிப்பெண்கள் குறித்து இடப்பட்ட "; குறியீட்டிற்கு'' கொடுக்கப்பட்ட விளக்கத்தினை நீக்கச் செய்து அதனை கீழ்க்கண்டவாறு படிக்கலாம்:–

**"முதலாமாண்டு செய்முறை தேர்வுகள், அவ்வாண்டு பொதுத் தேர்வுடன் இணைந்து நடத்தப்படும்''**

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்
அரசு முதன்மை செயலாளர்